# ஆனி மற்றும் ஆடி மாதம் (ஜூலை 2016) நடைபெறவுள்ள திருவிழாக்கள் விபரம்

மாவட்டம்: விழுப்புரம்.

| வ. எண் | திருக்கோயிலின் பெயர் மற்றும் தலவரலாறு/ அமைவிடம் சுருக்கமாக | முக்கிய திருவிழாக்கள் மாதம் வாரியாக | திருவிழாக்களின் முக்கிய நிகழ்வுகள் தேதி வாரியாக | திருவிழாக்கள் சிறப்புகள் சுருக்கமாக | தொலைபேசி எண்கள் | மின்அஞ்சல் முகவரிகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | அமி மஞ்சனீஸ்வரர் திருக்கோயில், கீழ்ப்புத்துப்பட்டு, மரக்காணம் வட்டம்.<br>**தலவரலாறு:**<br>பத்மாசூரன் என்ற அரக்கன் தன்னைவிட பலசாலியாக யாரும் இருக்கக்கூடாது என்ற எண்ணத்துடன், நாரதரின் அறிவுரையின்படி, சிவனை நோக்கி கடுந்தவம் இருந்தான். தவத்தை மெச்சிய சிவன் அவன்முன் தோன்றி வேண்டும்வரம் கேள் எனக்கூற, பத்தாசூரன், தான் யார் தலையில் கை வைத்தாலும் அவர்கள் எரிந்துவிட வேண்டும் என்ற வரத்தினைக் கோர, சிவனும் தந்தேன் என அருளினார். ஆனால், பத்மாசூரனோ சிவனின் தலையிலேயே கை வைக்கப்பார்க்க எத்தனிக்க சிவன் கிருஷ்ணனின் உதவியை நாட, அவர் மோகினி உருவெடுத்து பத்மாசூனிடம் சென்றார். மோகினியைக் கண்ட மோகங்கொண்டு அவளை அடைய | ஆடிமாத திங்கட்கிழமை சிறப்பு வழிபாடு | 18.07.2016 (ஆடி3) மற்றும் 25.07.2016 (ஆடி10) | குலதெய்வ வழிபாடு, கிடா வெட்டுதல் மற்றும் பொங்கல் வைத்தல் | செயல்அலுவலர் மேற்படி திருக்கோயில் 9944238917 | parikkalgroup@gmail.com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | முற்பட, மோகினி அவன் தலையை தண்ணீரை தெளித்து வரக் கூறினாள். பத்மாசூரனுன் அங்ஙனமே செய்யச்சென்று, அவன் தலையில் அவனே கைவைத்து எரிந்து சாம்பலானான். கிருஷ்ணனின் மோகினி உருவத்தை பார்த்த சிவன் மோகங்கொண்டார். சிவன், மோகினிக்கு பிறந்த குழந்தைக்கு ‘‘கையினாரப்பன்’’ என பெயரிட்டு, அருகிலிருந்த புற்றின் அருகே விட்டுவிட்டுச் சென்றனர். அக்குழந்தையே நாளடைவில் ‘‘ஐய்யனாரப்பன்’’ என மாறியது. | | | | | |
| 2. | அமி. வீரவாழியம்மன் திருக்கோயில், விழுப்புரம் நகர் (ம) வட்டம்<br>**<u>தலவரலாறு:</u>**<br>மிகவும் பழமை வாய்ந்த 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயிலாகும். இந்த அம்மன் தன்னை நாடிவரும் பக்தர்களின் குறைகளை நீக்கி வரமளிக்கும் மகாசக்தியாகஅருளாட்சி செய்கிறாள் . | ஆடிமாதம்<br>1–வெள்ளி<br>சாகைவார்த்தல்<br>உற்சவம் | 22.07.2016<br>(ஆடி7) | சாகைவார்த்தல் உற்சவம் மூன்று நாட்கள் திருவிழா நடைபெறும் | செயல்அலுவலர்<br>மேற்படி<br>திருக்கோயில்<br>9944238917 | parikkalgroup@gmail.com |
| 3. | அமி. கைலாசநாதர் திருக்கோயில், விழுப்புரம் நகர் (ம) வட்டம்.<br>**<u>தலவரலாறு:</u>**<br>கைலாசநாதர் திருக்கோயில், முதலாம் ராஜராஜன்,முதலாம் குலோத்துங்கன் | மாணிக்கவாசகர்<br>உற்சவம்<br>ஆனிதிருமஞ்சனம்<br>இலட்ச்சார்ச்சனை | 08.07.2016<br>(ஆனி 24)<br>10.07.2016<br>(ஆனி 26) | சிறப்பு வழிபாடு மற்றும் தரிசனம் நடைபெறும். | செயல்அலுவலர்<br>மேற்படி<br>திருக்கோயில்<br>9944238917 | parikkalgroup@gmail.com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கோப்பெருமசிங்கன், இராஜநாராயண சம்பவராயன், சடையவர்மன் ஆகிய மன்னர்கள் இத்திருக்கோயிலை திருப்பணி செய்ததாக கல்வெட்டுகள் மூலம் அறியலாம். மேலும் நாற்பது கற்தூண்கள் அமைக்கப்பட்டன. நடுவில் அமைந்துள்ள பன்னிரண்டு தூண்களில் நாயக்கர் கால சிற்பங்களும், சில தூண்களில் நாயக்க மன்னர்களின் தேவியரும் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வாலயம் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பே விழுப்புரம் நகரத்தில் பல்வேறு ஜாதியினர் கோயில் திருவிழாவை பத்து தினங்களாக கொண்டாடியது கல்வெட்டுகள் மூலம் அறியலாம். வண்ண சரபம் தண்டபாணி சுவாமிகள் இங்குள்ள வினாயகர் , முருகன், கைலாசநாதர் , பெரியநாயகி அம்மன் மீது பதிகங்கள் பாடியுள்ளார். | | | | | |
| 4. | அமி.மாரியம்மன் திருக்கோயில் , பூட்டை சங்கராபுரம் வட்டம்.<br><br>இத்திருக்கோயில் பிரார்த்தனை செய்வதற்காக கட்டப்பட்ட திருக்கோயிலாகும். | ஆடிமாத தேரோட்டம் | 23.07.2016 (ஆடி 8) | நான்கு நாட்கள் உற்சவம் | தக்கார்/ஆய்வாளர் 9443031312 | இல்லை |
| 5. | அமி.அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், ரிஷிவந்தியம் | ஆடிமாத தேரோட்டம் | 16.07.2016 (ஆடி 1) | பத்துநாட்கள் உற்சவம் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா | செயல்அலுவலர் மேற்படி திருக்கோயில் 8015386499 | இல்லை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | சங்கராபுரம் வட்டம்.<br>**<u>தலவரலாறு:</u>**<br>உமாமகேஸ்வரன் அகத்திய மாமுனிவருக்கு தம்பதி சமேதராய் திருமணக்கோலத்தில் காட்சிதந்த போது அய்யனின் திருமணக் கோலத்தை தான் கண்டதோடு, மட்டுமில்லாது ஊழிக் காலத்தில் பிறக்கும் அனைத்து மானிடர்களும் அக்கோலத்தை காண வேண்டும் என்ற வரம் கேட்டார். அதற்கு சிவன் தனக்கு தேனாபிஷேகம் செய்யும்போது மக்களுக்கு தரிசனம் தந்தருளுவோம் என அருளி மறைந்தார். | | | | | |